

துணை முதலமைச்சரும், தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் புரவலருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை காமராசர் சாலையில் உள்ள பாரத சாரண, சாரணியர் இயக்க தலைமையகத்தில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்ட பெருந்திரளணிக் கூடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே. சிற்றரசு, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.8.2025) சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி, புடவைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத்தலைவர் எஸ். மதன்மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மாமன்ற உறுப்பினர் ஏஆர்பி.எம். காமராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சரும், தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் புரவலருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுதந்திரத் திருநாளையொட்டி நேற்று முன்தினம் (15.8.2025) சென்னை காமராசர் சாலையில் உள்ள பாரத சாரண, சாரணியர் இயக்க தலைமையகத்தில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து, சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் பி.சந்தரமோகன், உள்பட அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் தனுஷ்கோடி வரை மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பேரணியை முகாம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (15.8.2025) கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதல்வர் தளபதியார் அவர்களின் வழிகாட்டுதலின்படி,79 ஆவது சுதந்திர தின விழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.08.2025) சென்னை சிந்தாதிரிப்பேட்டை ஆதிபுரீஸ்வரர் மற்றும் ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்ற சுதந்திரதின விழா சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன் பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜுடன் கலந்து கொண்டு சிறப்பித்தார். உடன் கோயில் செயல்அலுவலர் மற்றும் கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் அதிகளவில் பங்கேற்க விழிப்புணர்வு:

# இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் இருசக்கர வாகனப் பேரணி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஆக.17-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் சென்னையிலிருந்து இராமேஸ்வரம் தனுஷ்கோடி வரை மேற்கொள்ளும் இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக உருவாக்கி வருகின்றார்கள். விளையாட்டு போட்டிகளை பார்வையிடும் பார்வையாளராக இல்லாமல், அனைவரும் போட்டிகளில் பங்கேற்க செய்வதற்காக முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் - 2025 நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் ஒவ்வொரு மாவட்டத்திலும் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 19 வயதிற்குட்பட்ட பள்ளி மாணவர்களுக்கும், 25 வயதிற்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கும், 15 வயது முதல் 35 வரை பொதுப் பிரிவினருக்கும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளுக்கும், தமிழ்நாடு அரசு மற்றும் அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள், தமிழ்நாட்டில் பணிபுரியும் ஒன்றிய அரசு பணியாளர்கள் ஆகியோருக்கும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

மாவட்ட அளவில் 25 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மண்டல அளவில் 7 வகையான விளையாட்டுப் போட்டிகளும், மாநில அளவில் 37 வகையான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

தனி நபர் போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக 1.00 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும். குழு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக தலா 75 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக தலா 50 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக தலா 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

37 கோடி ரூபாய் மொத்த பரிசுத் தொகை கொண்ட 2025-ஆம் ஆண்டு முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளுக்கு இணையதளம் மூலமாக பதிவுகள் நடைபெற்று வருகின்றன. முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான https://cmtrophy.sdat.in/https://sdat.tn.gov.in வாயிலாக தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள முன்பதிவு நடைபெற்று வருகிறது. முன்பதிவு செய்ய கடைசி நாள் 20.8.2025 ஆக நீட்டிக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ள விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் அதனுடைய தலைவரும் சர்வதேச மோட்டார் பந்தய வீராங்கனையுமான செல்வி நிவேதா ஜெசிக்கா தலைமையில் இன்று (15.8.2025) சென்னையி லிருந்து புறப்பட்டு தாம்பரம், திண்டிவனம், விழுப்புரம், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் இராமேஸ்வரம் வழியாக தனுஷ்கோடி சென்றடைந்து மீண்டும் 17.8.2025 காலை புறப்பட்டு அன்று இரவே சென்னை வந்தடைகின்றனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.8.2025) முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதலமைச்சர் ரோப்பை விளையாட்டு போட்டிகளில் அதிகமானவர்கள் பங்கேற்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்திய பெண்கள் மோட்டார் சங்கம் சார்பில் மேற்கொள்ளும் வீரர், வீராங்கனைகளுக்கு வாழ்த்து தெரிவித்து, இருசக்கர வாகனப் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கே.ஏ. மதியழகன்

**ஆகஸ்ட் 17 (1983)**



தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் வழிநடந்த தன்மான தளகர்த்தர். தலைவர் கலைஞர் அவர்களது உடன்பிறப்பு, நாற்பதாண்டு காலத்திற்கு மேலாக திராவிடர் நலம்நாடி உழைத்த பெருமகனார்.

இயக்கப் பணியிலும், அறப்போராட்டத்திலும் முன்னின்று செயலாற்றி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கியவர்.

தமிழக அமைச்சராகவும், சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

“தமிழ் இனம் காக்க – மொழி காக்க தடந்தோள் உயர்த்திய தளபதி” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜி. ஆனந்தன்

**ஆகஸ்ட் 17 (2010)**



நீதிக் கட்சி தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் பேச்சாற்றலாலும் இளமைப் பருவத்தில் தன்னை கழகத்தில் இணைத்துக் கொண்டவர்.

35 ஆண்டுகாலம் தொடர்ந்து பி.என்.பாளையம் ஊராட்சிச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இரயில் மறியல் போராட்டம், சட்டநகல் எரிப்புப் போராட்டம், இந்தி எதிர்ப்புப் போராட்டம், மும்முனைப் போராட்டம் ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**